


திருச்சியில் நடந்த நீரிழிவு நோய் சிறப்பு மருத்துவர்களுக்கான மாநாட்டை பாரதிதாசன் பல்கலை. துணைவேந்தர் முத்துக்குமார் தொடங்கி வைத்தார். அருகில் டயாபடிக் கிளப் தலைவர் ராஜமாணிக்கம், செயலாளர் செந்தில்வேல், டாக்டர்கள் அஸ்ரப், பொன்னையா, சண்முகவேலு மற்றும் பலர்.

# கிராமங்கள் பயன்பெறும் வகையில் மருத்துவத்துறை வளர்ச்சி

## துணைவேந்தர் விருப்பம்

திருச்சி, ஜூன் 2-

திருச்சி சங்கம் ஓட்டலில் நீரிழிவு நோய் சிறப்பு மருத்துவர்களுக்கான 2 நாள் மாநாடு நடந்தது.

டயாபடிக் கிளப் தலைவர் ராஜ மாணிக்கம் தலைமை வகித்தார். பார திதாசன் பல்கலை. துணைவேந்தர் முத்துக்குமார் மாநாட்டை தொடங்கி வைத்து பேசுகையில், ''இன்று நாட்டை அச்சுறுத்தும் பல வித நோய்களுக்கான மருந்துகளை நமது முன்னோர்கள் கண்டறிந்து உள்ளனர். இத்தகைய மருந்துகள் தமிழத்திலி ருந்து வெளிநாடுகளுக்கு சென்று புகழ் பெற்றுள்ளது.

சமுதாயத்திற்கு பணி செய்வதில் மருத்துவ தொழில் முன்னோடியாக உள்ளது. மருத்துவர்கள் கிராமங்களை தத்து எடுத்து மக்களுக்கு சேவை புரிய வேண்டும். மருத்துவ துறையின் வளர்ச்சி கடைக்கோடியில் இருக்கும் கிராமத்து மக்களுக்கும் பயன்படும் வகையில் இருக்க வேண்டும்.

இன்றைய நவ நாகரீக மாண வர்கள் 'சிட்டிசனாக' இருப்பதை விட 'நெட்டிசனாக' (நெட் மீது ஆர்வம் ) இருப்பதில்தான் ஆர்வம் காட்டு கின்றனர். ஆங்கிலத்தை தொடர்பு மொழியாக வைத்துக் கொண்டு பல துறைகளிலும் தமிழ் மொழியில் படிக்க மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும். சிவில் சர்வீஸ் தேர்வு களை தமிழில் எழுத முயற்சிக்க வேண்டும். தமிழில் சிந்தித்து எழுது வது எளிதாக இருக்கும்'' என்றார்.

மாநாட்டில் நீரிழிவு நோயின் கார ணமாக காலில் ஏற்படும் காயம், டைப் -1, டைப்-2 மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் குறித்து விவா திக்கப்பட்டது.

2 நாட்கள் நடந்த இம்மாநாட்டில் டாக்டர்கள் மாத்யூ ஜான்(திருவனந்த புரம்), மோகன் காமேஸ்வரன்( சென்னை), ராமசந்திரன், உன்னிகி ருஷ்ணன் (புனே), கோயல் (கோல்கத்தா) உள்ளிட்ட 21 டாக்டர்கள் பல்வேறு தலைப்புகளில் சிறப்புரையாற்றினார்கள்.

டயாப்டிக் கிளப் துணை தலைவர் பிரசாத், டாக்டர்கள் அஸ்ரப், சண்முக வேலு, பொன்னையா உட்பட தமிழ கம் முழுவதிலிருந்தும் 350 டாக் டர்கள் கலந்து கொண்டனர். டயாப டிக் கிளப் செயலாளர் செந்தில்வேல் நன்றி கூறினார்.